**வீதி வலையமைப்பு முன்னேற்ற முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் - பகுதி - 1 - 2013**

---

வீதி வலையமைப்பு முன்னேற்ற முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் பகுதி 1 இன் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. சீன அபிவிருத்தி வங்கி ஒத்துழைப்பிற்கும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2010 திசெம்பர் 16 ஆந் திகதிய 4500402212010110492 ஆம் இலக்க கடன் வசதி உடன்படிக்கையின் கீழ் இந்தச் செயற்திட்டம் அமுலாக்கப்படுகின்றது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

வீதி வலையமைப்பு முன்னேற்ற முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் பகுதி 1 இற்கான கடன் வசதி உடன்படிக்கையின்படி, வீதி அபிவிருத்தி அதிகாரசபை (ஆர்டிஏ) செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. நிர்மாண ஒப்பந்தங்களின் கீழ் உத்தேசிக்கப்பட்ட முன்னுரிமைப்படுத்திய வீதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் புனரமைப்பு செய்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் வசதி உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ஐ.அ.டொலர் 169.8 மில்லியனானதுடன் அவற்றில் ரூபா 16,976 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 152.8 மில்லியன் அல்லது 90 சதவீதம் சீன அபிவிருத்தி வங்கி ஒத்துழைப்பினால் நிதியளிக்க உடன்பாடு காணப்பட்டிருந்தது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2010 திசெம்பர் 29 இல் தொடங்கியிருந்ததுடன் 2013 திசெம்பர் 29 இற்கு முன்னர் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வைபார்த்தல்களினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்

கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்டத்தின் தொழிற்பாடுகளிலிருந்து உருவான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டும் வண்ணம் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் வசதி உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்ட அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஊ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) கடன் வசதி உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் வசதி உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4 நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிச் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா 6,149.95 மில்லியனானதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 17,719.09 மில்லியனாகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பை பின்வரும் கூற்று காட்டுகிறது.

| **செலவின வகை** | **திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம்** | | **2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம்** |
|---|---|---|---|
| | **2013** | **2012** | |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| நிலையான சொத்துக்கள் | 519,996 | 1,450,273 | 2,044,922 |
| வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மாற்றப்பட்ட சொத்துக்கள் | - | 3,392,857 | 3,392,857 |
| நடைபெறும் வேலைகள் | 6,149,431,108 | 8,633,859,994 | 17,713,656,224 |
| | 6,149,951,104 | 8,638,703,124 | 17,719,094,003 |

## 5. கணக்காய்வு அவதானிப்புகள்

### 5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களிற்கான படிகள் மற்றும் ஏனைய செயற்திட்டத்தின் பதவியணியினருக்காக செலுத்தப்பட்ட படிகள் மற்றும் சம்பளங்கள் என்பவற்றிற்காக செயற்திட்டத்தால் செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,641,835 கூட்டுத் தொகையான செலவினங்கள் செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக நேரடியாக தொடர்புப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஆ) செயற்திட்டத்திற்கு தொடர்புபட்டிருக்காத ஏனைய நிறுவனங்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டிருந்த கணனி, கணனி உதிரிப்பாகங்கள், அலுவலக பயன்பாடுகள் மற்றும் டிஜிரல் கமராக்கள் என்பவற்றின் கொள்வனவிற்கு செயற்திட்டத்தால் மீளாய்வாண்டின் போது ரூபா 810,053 தொகை செலவழிக்கப்பட்டிருந்தது.

## 6. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 6.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டிற்கான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் வசதி உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்டதொகை | | 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | 2013 ஆம் ஆண்டின் போது பயன்படுத்திய நிதிகள் | | 2013 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய நிதிகள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில் | ரூபா மில் | ரூபா மில் | ஐ.அ. டொலர் மில் | ரூபா மில் | ஐ.அ. டொலர் மில் | ரூபா மில் | % |
| சீடிபீ | 152.8 | 16,976 | 3,200.00 | 24.77 | 3,193.51 | 112.35 | 13,461.61 | 73.52 |
| இலங்கை அரசாங்கம் | 17.0 | 1,888 | 569.40 | - | 569.30 | - | 1,983.01 | 105.03 |
| | 169.8 | 18,864 | 3,769.40 | **24.77** | *3,762.81 | **112.35** | ***15,442.62** | |

* அட்டுறு செலவினம், பணிக்கொடைக்கான ஏற்பாடு, ஆலோசனையாளர் மற்றும் ஒப்பந்தகாரருக்கு செலுத்த வேண்டிய தொகை, பிடிகாசு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையுடன் உள்ளக நடைமுறைக் கணக்கின் மீதி என்பன உள்ளடக்காமை காரணமாக இந்த அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் காட்டப்பட்ட தொகைகளிலிருந்து இந்தத் தொகைகள் வித்தியாசப்படுகின்றன.

** 2010 திசெம்பர் 16 இல் நிலவிய ஒரு ஐ.அ.டொலருக்கு ரூபா 111.10 வீதத்தில் உடன்பட்ட கடன் தொகை மாற்றப்பட்டிருந்தது.

### 6.2 பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்ட ஆவணங்களின் பிரகாரம், செயற்திட்ட காலத்தின் போது 06 பொதிகளின் கீழ் 08 வீதிகளின் புனரமைப்பு வேலைகளை பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன், அவற்றுள் 6 வீதிகளின் புனரமப்பு வேலைகள் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. திரிவாணாகெடிய – அகலவத்தை வீதியின் (சீ3) மற்றும் பெலவத்த கன்கொட்டியவத்தை- தினியாகல – மொறவக வீதி (சீ2ஏ) என்பவற்றின் புனரமைப்பு வேலைகள் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு முறையே 56.6 சதவீதம் மற்றும் 78.7 சதவீதமான நலிவான முன்னேற்றத்தை காட்டியிருந்தன.

(ஆ) செயற்திட்டத்தில் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், திருவாணகெடிய – அகலவத்தை வீதியின் 4+ 100 கிலோமீற்றர் முதல் 13+ 750 கிலோ மீற்றர் வரையான வீதியில் இடப்பட்ட ஆஸ்பற் கொங்றீட் நியமங்களின் பிரகாரம் இருக்கவில்லை. அளவீட்டுத் தாளின் பிரகாரம், குணநலன் தோல்வியுற்றிருந்த 25 இடங்களில் 15 இடங்களில் தவறுகள் மாத்திரம் ஒப்பந்தகாரரால் திருத்தப்பட்டிருந்தது. மேலும் கொங்றீட் கட்டமைப்பின் கியூப் வலுவை அளவிடுவதற்கு மேற்கொள்ளப்பட்ட

சோதனைகளில் 15 தோல்வியடைந்த சந்தர்ப்பங்கள் வெளிப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 04 தவறிழைத்த சந்தர்ப்பங்கள் திருத்தப்பட்டிருந்தது.

### 6.3 ஒப்பந்த நிர்வாகம்

வாகனங்களின் கொள்வனவு பராமரிப்பு மற்றும் பெயர் பலகை பொருத்துதல் போன்ற நடவடிக்கைகள் திருவாணாகெடிய – அகலவத்தை வீதியின் புனரமைப்பிற்காக தயாரிக்கப்பட்ட மூல அளவீட்டுப் பத்திரங்களில் இனங்காணப்பட்டு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, திருவாணகெடிய – அகலவத்தை வீதியின் புனரமப்பிற்கான ஒப்பந்தத்தின் மாற்றங்களாக ரூபா 16,531,596 கூட்டுத்தொகையான மொத்தக் கிரயம் இனங்காணப்பட்டு அதன் பிரகாரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 6.4 மனிதவள முகாமைத்துவம்

2007 ஏப்ரல் 5 ஆந் திகதிய டிஎம்எஸ் - 33 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், இச்செயற்திட்டத்தின் பதவியணி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், 03 ஆலோசனையாளர்கள் உரிய அங்கீகாரங்கள் பெற்றுக்கொள்ளாமல் சேர்க்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 1,860,000 தொகையான வேதனங்கள் செலுத்தப்பட்டிருந்தன. அந்த ஆலோசனையாளர்களின் நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டவாறு வேலை விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, செயற்திட்டத்தின் குறிக்கோள்களை அடைவதற்கு அத்தகைய ஆலோசனையாளரின் பங்களிப்பு கணக்காய்வில் மதிப்பிட முடியாதிருந்தது.